**<u>சாட்சிய வாக்குமூலம்</u>**

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No.117 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா.சா | : | 3 | நாள் | : | 02.12.2025 |
| பெயர் | : | நிர்மலா | ஜாதி | : | |
| தந்தை பெயர்/ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலூகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02nd day of December 2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது தென்காசி ஆயுள் காப்பீட்டு கழகத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இன்று திருநெல்வேலி மண்டல அலுவலகத்திலிருந்து நீதிமன்றம் ஆஜராகி ஆவணங்களை ஒப்படைக்க எனக்கு மண்டல அலுவலகத்திலிருந்து அறிவுரை வழங்கப்பட்டது அதனடிப்படையில் இன்று நான் நீதிமன்றம் ஆஜராகியுள்ளேன். அந்த கடிதம் சாட்சி தரப்பு சான்றாவணம் 7 ஆகும். இன்று அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை ஆஜர்படுத்தியுள்ளேன். லதா என்பவர் மாரிமுத்து என்பவர் மீது கொடுத்த புகார் தொடர்புடைய ஆவணங்களில் துறை ரீதியான விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டதையும் குறித்து சாட்சியமளிக்க அழைப்பாணை வரப்பெற்றிருந்தது. விசாரணை அலுவலராக திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார் மேலும் திரு.பாலசுப்பிரமணியன் 06.06.2015 அன்று அவருக்கு வழங்கப்பட்ட விசாரணையை முடித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையின் நகல் சாட்சி தரப்பு சான்றாவணம் 8 ஆகும். விசாரணையின்போது மாரிமுத்து

கொடுத்த விளக்கத்தின் ஒளிநகல் சாட்சி தரப்பு சான்றாவணம் 9 ஆகும். லதா என்பவருக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டு கடித நகல் சாட்சி தரப்பு சான்றாவணம் 10 ஆகும்.

**குறுக்குவிசாரணை**

சா.சா.ஆ.8 அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதும் விசாரணையின்போதும் நான் மண்டல அலுவலகத்திலோ தென்காசி அலுவலகத்திலோ பணிபுரியவில்லை என்றால் சரிதான். லதா என்பவர் மாரிமுத்து மீது கொடுத்த புகாரின் சாராம்சம் எதுவும் எனக்கு தெரியாது. மாரிமுத்து மீது சா.சா.ஆ.8 முதல் 10 வரையிலான ஆவணத்தின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியாது. சா.சா.ஆ.9 மற்றும் 10 அனுப்பப்பட்ட போதும், பெற்றுக் கொண்டபோதும் நான் மண்டல அலுவலகம் மற்றும் தென்காசி அலுவலகத்தில் பணிபுரியவில்லை அதுபற்றி எனக்கு நேரில் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.12.02 17:52:08 +0530